பத்திரிகை வெளியீட்டுப் பிரிவு
மைய அலுவலகம் மும்பை
த.பெ. எண்.406
மும்பை-400 001
தொலைபேசி எண்: 22660502
நகலனுப்பி எண்: 22660358
22703279

இந்திய ரிசர்வ் வங்கி

மார்ச் 29, 2007

## இந்திய ரிசர்வ் வங்கி வரிப்பணத்தை வங்கி வேலை நேரத்திற்குப் பிறகும் மார்ச் 31 அன்று பெற்றுக் கொள்ளும்

பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு, இந்திய ரிசர்வ் வங்கி தனது மும்பை மற்றும் நவி மும்பை அலுவலக முகப்புகளில் மார்ச் 31, 2007 அன்று மாலை 4 மணி வரை வரி செலுத்த விரும்புவோர் செலுத்தும் பணத்தை ஏற்றுக் கொள்ள சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. காசோலை அல்லது வேறு உபகரணங்கள் மூலம் அரசுக்கு வரி செலுத்துவோர், 5 மணி வரை மார்ச் 31, 2007 அன்று ரிசர்வ் வங்கி பெற்றுக் கொள்ளும்.

முகவர் வங்கிகள் முறையே, ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் அதன் சார்பு வங்கிகள், நியமிக்கப்பட்ட பொதுத்துறை வங்கிகள் வங்கி அலுவலக வேலை நேரத்திற்குப் பின்னரும் மார்ச் 31, 2007 அன்று வரிப்பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு அவைகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மார்ச் 31, 2007 தேதியன்று முடியும் நிதியாண்டிற்கான இந்த வசதிகளை, வரி செலுத்துவோர் பயன்படுத்திக் கொள்ளுமாறு ரிசர்வ் வங்கி கேட்டுக் கொள்கிறது.

அஜித் பிரசாத்

மேலாளர்

பத்திரிகை வெளியீடு: 2006-2007/1316